மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு

முன்னிலை : திரு.G.முனிக்குமார், B.Sc.,B.L.,
நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண்.1,
ஈரோடு.

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீ விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 02-ஆம் நாள்
2025-ம் வருடம் ஏப்ரல் மாதம் 15-ஆம் நாள் செவ்வாய்கிழமை

STC No.374/2023

CNR No. TNED 1500 4837 2023

R.P.சுரேந்தர், (51/2023),
த/பெ.பழனிச்சாமி,
189/5, மடிக்காரர் காலனி,
வெட்டுக்காட்டுவலசு,
நசியனூர் ரோடு,
ஈரோடு - 638 011. .... புகார்தாரர்

/எதிர்/

S.ராமகிருஷ்ணன், (50/2023),
TATA SKY Distributer,
42/5, RRDR காம்ப்ளக்ஸ்,
நஞ்சப்பா 2 வது தெரு,
Behind Bus Stand,
ஈரோடு - 1. .... எதிரி

CASE SUMMARY

RULE 106 of CRPC

S.No	PARTICULARS	
01	Name of the Parties - **Complainant : R.P.Surender, S/o.Palanisamy.** **Accused : S.Ramakrishnan, S/o.M.Subramaniam.**	
02	Accused Age	50 Years
03	Father's Name	S/o.M.Subramaniam

04	Caste or Religion	Hindu
05	Calling	Hotel
06	Residence / Office / Working Address	42/5, RRDR Complex, Nachiyappa 2nd St, Behind Bus Stant, Erode - 1.
07	Taluk	Erode
08	Date of Occurrence	-
09	Date of filing	07.06.2023
10	Apprehension	-
11	Release on bail	-
12	Commitment	Not Applicable
13	Commencement of Trial	30.08.2023
14	Closure of Trial	09.04.2025
15	Sentence of Order	Acquittal U/s.255 (1) of Cr.P.C.
16	Service of copy of Judgment	No
17	**Case Summary :** Period of Remand of the accused	-
18	Date of filing of the final report	Not Applicable
19	Date of Questioning under section 251 of Cr.P.C.	08.08.2024
20	Date of examination accused u/s.313(1)(b) of Cr.P.C.,	18.10.2024
21	Miscellaneous Petition and their results	1) Petition u/s.311 of Cr.P.C. in CMP No.6289/2024, allowed on 16.12.2024.
22	Date of examination in Chief and Cross	**1. PW 1 Chief :** 30.08.2023.
23	Details of abscondence of accused his appearance/ Production	NIL
24	Grant of stay by Superior Court and the results thereof	NIL

இந்த வழக்கானது கடந்த 07.06.2023-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு STC No.374/2023-ஆக கடந்த 30.08.2023-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு, கடந்த 09.04.2025-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வரப்பெற்று புகார்தாரர்தரப்பில் வழக்கறிஞர். Tr.CPS.Shankar,B.Com.,B.L., அவர்களும்,

எதிரிதரப்பில் வழக்கறிஞர் Tr.C.Poorneswaran,B.Com.,C.L.,MA.,M.L., அவர்களும் ஆஜராகியும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து வந்து புகார்தாரர்தரப்பு வாதம் கேட்கப்பட்டும், புகார்தாரர்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

1. புகார்தாரர் தனது புகாரில், எதிரியை புகார்தாரருக்கு நன்கு தெரியும் எனவும் எதிரி புகார்தாரரிடம் கடந்த 19.03.2023-ம் தேதியன்று தனது அவசர தேவைக்காக ரூ.4,00,000/-த்தை கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி கடனை 18 சதவீத வட்டியுடன் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு மேற்படி கடன் தொகையை பெற்றதாகவும் மேற்படி கடன் தொகைக்கு 19.03.2023-ம் தேதியன்று ஒரு மாத வட்டியாக ரூ.6,000/-த்தை முன்கூட்டியே புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், எதிரி மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு அதற்கு ஈடாக, ஈக்குவிட்டாஸ் சுமால் பைனான்ஸ் வங்கி, ஈரோடு பெருந்துறை ரோடு கிளையின் 19.04.2023 தேதியிட்ட காசோலை எண்.000010, ரூ.4,00,000/-த்திற்கான காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், எதிரி கேட்டுக் கொண்டதின்பேரில் மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்குள்ள ஆக்சிஸ் வங்கி, ஈரோடு, சுதா மருத்துவமனை, பெருந்துறை ரோடு கிளையில் கடந்த 20.04.2023-ம் தேதியன்று வசூலூக்கு தாக்கல் செய்ததில் மேற்படி காசோலை "Payment Stopped by the Drawer" என்ற காரணத்தால் வசூலாகாமல் கடந்த 21.04.2023-ம் தேதியன்று திருப்பப்பட்டுள்ளது எனவும், மேற்படி காசோலை வசூலாகாமல் திருப்பப்பட்ட விபரம் குறித்து புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலமாக கடந்த 08.05.2023 ம் தேதியன்று அனுப்பிய அறிவிப்பை எதிரி கடந்த 09.05.2023-ம் தேதியன்று பெற்றுக் கொண்டதாகவும், பின்னிட்டு இதுநாள்வரையில் எதிரி புகார்தாரருக்கு வழக்கு காசோலை தொகையோ, பதில் அறிவிப்போ தரவில்லை எனவும், எனவே எதிரி புகார்தாரருக்கு வழக்கு

காசோலைகள் தொகையை திருப்பித்தராமல், ஏமாற்றும் எண்ணத்தில் காசோலை மோசடி செய்துள்ளதால் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138 ன்கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி எதிரியை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுத்து காசோலை தொகையை திரும்ப செலுத்த உத்தரவிடவேண்டியும் கு.வி.மு.ச.பிரிவு.357 ன்கீழ் இழப்பீடு வழங்க உத்தரவிடவேண்டியும் புகார்தாரரால் இத்தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில், புகார்தாரரின் சத்தியப் பிரமாண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, பரிசீலித்து கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இவ்வழக்கில் ஆஜரான பின்பு, கு.வி.மு.ச.பிரிவு.204(3)ன்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, கு.வி.மு.ச.பிரிவு.251-ன்கீழ் குற்றம் பற்றி வினவியபோது, எதிரி **"பொய் வழக்கு. புகார்தாரர் யார் என்று தெரியாது. நந்தக்குமார் என்பவரிடம் ரூ.1,00,000/- பணம் கடன் வாங்கும்போது பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மட்டும் செய்து 3 செக்குகள், 1 பாண்டு கொடுத்திருந்தேன். வட்டி மற்றும் அசல் கொடுத்துவிட்டேன். நந்தக்குமார் விரைவு நீதிமன்றம் எண்.2-ல் என்மீது செக் கேஸ் போட்டுள்ளார். புகார்தாரர் மூலம் பொய்யாக வழக்கு போட்டுள்ளார்"** என்று **பதில் அளித்துள்ளார்.**

3. புகார்தாரர்தரப்பில் புகார்தாரர் தன்னை பு.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு, எதிரியை புகார்தாரருக்கு நன்கு தெரியும் எனவும் எதிரி புகார்தாரரிடம் கடந்த 19.03.2023-ம் தேதியன்று தனது அவசர தேவைக்காக ரூ.4,00,000/-த்தை கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி கடனை 18 சதவீத வட்டியுடன் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு மேற்படி கடன் தொகையை பெற்றதாகவும் மேற்படி கடன் தொகைக்கு 19.03.2023-ம் தேதியன்று ஒரு மாத வட்டியாக ரூ.6,000/-த்தை முன்கூட்டியே புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், எதிரி மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு அதற்கு ஈடாக,

ஈக்குவிட்டாஸ் சுமால் பைனான்ஸ் வங்கி, ஈரோடு பெருந்துறை ரோடு கிளையின் 19.04.2023 தேதியிட்ட காசோலை எண்.000010, ரூ.4,00,000/-த்திற்கான காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், 19.04.2023 தேதியிட்ட ஈக்குவிட்டாஸ் வங்கி காசோலை எண்.000010, ரூ.4,00,000/-த்திற்கான காசோலை பு.சா.ஆ.1 ஆகவும், 21.04.2023 தேதியிட்ட வங்கி குறிப்பாணை பு.சா.ஆ.2 ஆகவும், 08.05.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பு.சா.ஆ.3 ஆகவும், 08.05.2023 தேதியிட்ட அஞ்சலக ரசீது பு.சா.ஆ.4 ஆகவும், 09.05.2023 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை பு.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு எதிரி வழக்கு காசோலைத் தொகையோ, பதில் அறிவிப்போ தராமல் உள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டப்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாகவும், பு.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

4. புகார்தாரரின் புகார், முதல் விசாரணை சாட்சியம் அதனுடன் குறியீடு செய்யப்பட்ட பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களை பரிசீலித்து கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இவ்வழக்கில் ஆஜரான பின்பு, கு.வி.மு.ச.பிரிவு 204(3)-ன்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, கு.வி.மு.ச.பிரிவு.251 ன்கீழ் குற்றம் பற்றி வினவியபோது எதிரி, **"பொய் வழக்கு. புகார்தாரர் யார் என்று தெரியாது. நந்தக்குமார் என்பவரிடம் ரூ.1,00,000/- பணம் கடன் வாங்கும்போது பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மட்டும் செய்து 3 செக்குகள், 1 பாண்டு கொடுத்திருந்தேன். வட்டி மற்றும் அசல் கொடுத்துவிட்டேன். நந்தக்குமார் விரைவு நீதிமன்றம் எண்.2-ல் என்மீது செக் கேஸ் போட்டுள்ளார். புகார்தாரர் மூலம் பொய்யாக வழக்கு போட்டுள்ளார்"** என்று **பதில் அளித்துள்ளார்.**

5. பின்னிட்டு புகார்தாரர்தரப்பு சாட்சியம் பு.சா.1-வுடன் முடித்துக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர், புகார்தாரர்தரப்பு சாட்சியங்களிலிருந்து

எதிரியை குற்றத்திற்கு உட்படுத்தும் சாட்சியமான அவருக்கு பாதகமான பகுதிகள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு.313(1)(b)-ன்கீழ் வினவியபோது எதிரி, **“பொய். பொய் வழக்கு"** என்றும், தனதுதரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு எனவும் எதிரி பதில் அளித்துள்ளார். ஆனால் எதிரிதரப்பில் எவ்வித சாட்சிகளும், சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6. **தீர்வுக்குரிய பிரச்சனை :** இவ்வழக்கில்,

i) எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள மாற்று முறை ஆவணங்கள் சட்டப்பிரிவு 138 ன்கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

ii) புகாரில் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

7. முதலில், எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138-ன்கீழான குற்றச்சாட்டு குறித்து புகார்தாரர்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பார்க்கையில், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன்கீழ் எதிரியை தண்டிக்க வேண்டுமெனில் குறைந்தபட்சம் கீழ்க்காணும் ஏழு உட்கூறுகள் புகார்தாரர்தரப்பில் நிரூபணம் செய்யப்பட வேண்டும்.

(i) சம்பந்தப்பட்ட எதிரி தன்னால் பராமரிக்கப்பட்டு வந்த வங்கி கணக்கிற்கு உரிய காசோலை வழங்கி இருக்க வேண்டும்.

(ii) அவ்வாறு வழங்கப்பட்ட காசோலையானது எதிரியால் பெறப்பட்ட சட்டபடியான கடன்களிலிருந்து தன்னை முழுமையாக விடுவிக்கும் பொருட்டோ அல்லது பகுதியாக விடுவிக்கும் பொருட்டோ அல்லது வேறு பொறுப்பில் இருந்து விடுவிக்கும் பொருட்டோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(iii) மேற்படி காசோலையானது அதில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளோ அல்லது அதன் செல்லும் தன்மை

காலத்திற்குள்ளாகவோ பணம் ஆக்கும் பொருட்டு வங்கியில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(iv) அவ்வாறான காசோலையை பணம் ஆக்கும் பொருட்டு அதனை பெற்ற நபரோ அல்லது மேற்படி காசோலையை உடமையில் கொண்டுள்ள நபரோ தனது வங்கி கணக்கு மூலம் செலுத்தும் போது அது மதிப்பிழந்து திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

(v) அவ்வாறான காசோலை மதிப்பிழந்து திருப்பப்படும் போது அது சம்மந்தமாக வங்கியிலிருந்து பெறப்பட்ட குறிப்பாணை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து பூர்வமான காசோலை கண்ட தொகையை திரும்ப செலுத்தக் கோரி அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும்.

(vi) அவ்வாறு கொடுக்கப்பட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்ட எதிரி அதனை பெற்றுக் கொண்ட 15 தினங்களுக்குள் காசோலையில் கண்ட தொகையை திரும்ப செலுத்த தவறி இருக்க வேண்டும்.

(vii) அவ்வாறு திரும்ப செலுத்த தவறிய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் புகார்தாரரால் புகார் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

8. மேற்படியான உட்கூறுகளை புகார்தாரர்தரப்பில் நீதிமன்றம் ஏற்கத்தக்க வகையில் நிரூபணம் செய்யும் பட்சத்திலேயே சம்பந்தப்பட்ட எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138-ன்கீழ் தண்டிக்க இயலும். அந்த வகையில் முதலாவது உட்கூறாக இவ்வழக்கில் கண்ட புசாஆ 1 காசோலை எதிரியின் வங்கி கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரிதரப்பில் மறுக்கப்படவில்லை என்பதால் வழக்கு காசோலை எதிரியின் வங்கிக்குரிய காசோலைதான் என எதிரிதரப்பில் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

9. மேற்படியான உட்கூறுகள் அனைத்தையும் புகார்தாரர்தரப்பில் நீதிமன்றம் ஏற்கத்தக்க வகையில் நிரூபணம் செய்யும் பட்சத்திலேயே சம்பந்தப்பட்ட எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138-ன்கீழ் தண்டிக்க இயலும். அந்த வகையில் முதலாவது உட்கூறாக இவ்வழக்கில் கண்ட

பு.சா.ஆ.1 காசோலையானது எதிரியின் வங்கி கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரிதரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, புகார்தாரர்தரப்பில் வழக்கு காசோலை எதிரியின் வங்கிக்குரிய காசோலைதான் என்பதை நிரூபணம் செய்துள்ளாரா என பரிசீலனை செய்ய வேண்டும்.

10. இவ்வழக்கு காசோலையானது, 19.04.2023 தேதியிட்டுள்ள நிலையில் அக்காசோலையானது புகார்தாரரால் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருவதால் வழக்கு காசோலையை புகார்தாரர் உரிய காலத்தில் வங்கியில் முன்னிட்டுள்ளது நிரூபணமாகிறது.

11. இனி, வழக்கு காசோலை சட்டமுறைப்படி திருப்பப்பட்டுள்ளதா? என்று பார்க்கையில் பு.சா.ஆ.1 வழக்குக் காசோலை பு.சா.ஆ.2 வங்கி ரிட்டன் மெமோவின்படி “Payment Stopped by the Drawer" என திருப்பப்பட்டுள்ளது குறித்து எதிரிதரப்பில் எவ்வித மறுப்பு கருத்தும் தெரிவிக்காததாலும், எதிரி குற்றப்பொறுப்புக்கு உள்ளாவார் என இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

12. அடுத்து, வழக்கு காசோலை திருப்பப்பட்டவுடன் தொகை செலுத்த 15 நாட்கள் கால அவகாசம் கொடுத்து அனுப்பப்பட்ட அறிவிப்பு எதிரிக்கு சார்வு செய்யப்பட்டுள்ளதா? என்று பார்க்கையில் வழக்கு காசோலை 19.04.2023 தேதியிட்டுள்ள நிலையில், 21.04.2023 தேதியிட்ட வங்கி ரிட்டன் மெமோ பு.சா.ஆ.2 மூலம் திருப்பப்பட்டுள்ளது என்றும் பின்னிட்டு 08.05.2023 தேதியிட்ட பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு அனுப்பி உள்ளதும், மேற்படி அறிவிப்பை எதிரி கடந்த 09.05.2023-ம் தேதியன்று பெற்றுக் கொண்டுள்ளது பு.சா.ஆ.5 அஞ்சலக ஒப்புகை அட்டையின் மூலமும் தெரிய வருகிறது. எனவே, புசாஆ.3 சட்ட அறிவிப்பு எதிரிக்கு முறைப்படி சார்வு செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. அடுத்ததாக, எதிரி தற்போதுவரை வழக்கு காசோலை தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதை எதிரிதரப்பில் மறுக்கவில்லை.

மேலும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கானது, கடந்த 07.06.2023-ம் தேதியன்று உரிய காலத்தில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், புகார்தாரர்தரப்பில் 1, 3 முதல் 7 உட்கூறுகளும் நிவர்த்தி செய்துள்ளது தெரிய வருகிறது.

14. இவ்வழக்கில், எதிரிதரப்பில் புகார்தாரர் கடந்த 30.08.2023 ம் தேதியன்று முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னிட்டு புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக கு.வி.மு.ச.பிரிவு.311 ன்படியான மனு தாக்கல் செய்யப்பட்டு சி.எம்.பி.எண்.6289/2024-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 16.12.2024 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதற்கு பின்னிட்டும் புகார்தாரர் கடந்த 08.01.2025, 01.03.2025, 24.03.2025, 04.04.2025, 09.04.2025-ஆகிய தேதிகளில் புகார்தாரர் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மேற்படி தேதிகளில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தும் புகார்தாரர் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 09.04.2025 ம் தேதியன்று குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டு, எதிரிதரப்பில் கேட்கப்பட்டு பின்னிட்டு புகார்தாரர்தரப்புக்கு கடந்த 12.04.2025-ம் தேதிக்குள் வாதுரைக்க வாய்ப்பு வழங்கப்பட்டு இன்று தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

15. இவ்வழக்கின் புகார்தாரர் தன்னை எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உட்படுத்திக் கொள்ளாததால் 09.04.2025-ம் தேதி எதிரியின் வாதம் கேட்கப்பட்டு புகார்தாரருக்கு 12.04.2025 ம் தேதிக்குள் வாதுரைக்க வாய்ப்பு வழங்கப்பட்டு 15.04.2025-ம் தேதியன்று தீர்ப்புக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் புகார்தாரர் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தன்னை உட்படுத்திக் கொள்ளாததால் இவ்வழக்கானது புகார்தாரருக்கு ஆதரவாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக என ஆய்வு செய்கையில், மாண்புமிகு பஞ்சாப் ஹரியானா உயர்நீதிமன்றம், **Jagvindar Singh Versus State of Punjab and another It was held that**,

"The word evidence used in section 319 of the code means admissable evidence. The statement of a witness, when he is yet to be cross examination cannot be treated as evidence in the eyes of law. An incomplete statement of a witness, whether being only his statement in examination in chief or at any other stage before It is completed, cannot be treated as evidence upon which the court can act while dealing with an application under section 319 of the Code".

மேலும், Syed Dastageer Versus State of A.P. என்ற வழக்கில், No evidence affection a party is admissible against that party unless the later has had an opportunity of testing its truthfulness by cross examination, என சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி முன்தீர்ப்புகளின் நெறிமுறைகளின்படி புகார்தாரர் (பு.சா.1) தன்னை குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு உட்படுத்திக் கொள்ளாததால் பிரமாண பத்திரிக்கை மூலமாக தாக்கல் செய்த முதல் விசாரணை சாட்சியத்தை மட்டும் வைத்து அதன் உண்மை தன்மையை ஏற்றுக் கொள்ள இயலாது என தெரிய வருகிறது. மேற்கண்ட முன்தீர்ப்புகளின்படி புகார்தாரர் இவ்வழக்கில் தன்னை குறுக்கு தொடர்ச்சிக்கு தன்னை உட்படுத்திக் கொள்ளாததால் அவருடைய சாட்சியத்தை ஒரு சாட்சியமாக இவ்வழக்கில் ஏற்க இயலாது என அறிய முடிகிறது.

16. எனவே புகார்தாரர்தரப்பில் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்பிரிவு 138ன்படியான உட்கூறுகளை எதிரிக்கு எதிராக நிரூபணம் செய்யவில்லை என்றும், எதிரி புகார்தாரருக்கு ஆதரவான சட்டப்படியான அனுமானத்தை மறுத்துள்ளார் எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. புகார்தாரர் தன்னை குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு உட்படுத்திக் கொள்ளாததால் பு.சா.1 ன் சாட்சியம் ஏற்கக்கூடிய சாட்சியமாக அல்ல என்பதால் பு.சா.1 சாட்சியத்தை நீக்கரவு செய்யப்படுகிறது. இந்நிலையில் பு.சா.1-ன்

சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி சட்டப்படியான கடனுக்காக வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என கருத இயலாது.

17. வழக்கு காசோலை புகார்தாரருக்கு வழங்கப்பட்டது குறித்து பிரிவு 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்கீழ் எதிரிக்கு எதிராக உள்ள சட்டப்படியான அனுமானத்தை தவறு என எதிரிதரப்பில் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, வழக்கு காசோலை சட்டப்படியான மறுபயனுக்கு வழங்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் கடமை புகார்தாரருக்கு இடம் பெயர்கிறது. ஆனால், பு.சா.1 முதல் விசாரணை சாட்சியம் அளித்துவிட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஆஜராகாததால் புகார்தாரர் தன் வழக்கை நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிரிமீதான மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138 ன்கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. மேற்படி வழக்கின் பொருண்மைகளை பரிசீலிக்கையில், புகார்தாரர்தரப்பில் எதிரிமீதான மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138 ன்கீழான குற்றச்சாட்டு புகார்தாரர்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19. இனி, புகாரில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்று பார்க்கையில் புகார்தாரர்தரப்பில் எதிரிமீதான மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138-ன்கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால், புகாரில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

20. <u>தீர்வு :</u>

எதிரி ஆஜர் இல்லை. புகார்தாரர்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களை சீர்தூக்கி பார்த்தவகையில், எதிரிமீது சாட்டப்பட்ட மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்பிரிவு 138-ன்கீழான குற்றச்சாட்டு புகார்தாரர்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என தீர்மானிக்கப்படுகிறது.

முடிவாக, எதிரியை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்பிரிவு 138 ன்கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு.255(1)-ன்கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. இழப்பீட்டுத் தொகைக்கு உத்தரவில்லை.

என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு **2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 15-ம் நாள் செவ்வாய்கிழமை** திறந்த நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

MUNIKUMAR G

Digitally signed by MUNIKUMAR G
Date: 2025.04.15 19:31:51 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண் 1,
ஈரோடு.

<u>**புகார்தாரர்தரப்பு சாட்சிகள்**</u> :

01. பு.சா.1 - R.P.சுரேந்தர்- புகார்தாரர்.

<u>**புகார்தாரர்தரப்பு சான்றாவணங்கள்**</u> :

01. பு.சா.ஆ.1 - 19.04.2023 - ரூ.4,00,000/- ஈக்குவிட்டாஸ் வங்கி காசோலை எண்.000010.
02. பு.சா.ஆ.2 - 21.04.2023 - வங்கி குறிப்பாணை.
03. பு.சா.ஆ.3 - 08.05.2023 - வழக்கறிஞர் அறிவிப்பு.
04. பு.சா.ஆ.4 - 08.05.2023 - அஞ்சலக ரசீது.
05. பு.சா.ஆ.5 - 09.05.2023 - அஞ்சலக ஒப்புகை அட்டை.

<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :

- இல்லை -

MUNIKUMAR G

Digitally signed by MUNIKUMAR G
Date: 2025.04.15 19:32:03 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண் 1,
ஈரோடு.